பாடம் 4

# நடு இரவில் நடந்த அற்புதம்

***சிலநாட்களுக்கு முன்னர்தான் யூரியேல் சைக்கிள் ஓட்டக் கற்றிருந்தான். அவ்வாறு ஓட்டிக்கொண்டிருந்த அவன் கீழே விழ நேர்ந்தபோது ஆண்ட்ரூ அவனைக் காப்பாற்றினான். இன்றும்கூட பவுல் காப்பாற்றிய ஒருவனைப்பற்றிப் பார்ப்போமா?***

பவுலும் சீலாவும் மூன்று மாதம் கிரேக்கு தேசத்திலே தேவனுடைய ஊழியத்தைச் செய்தார்கள். பின்னர் தேவனுடைய பிள்ளைகள் சிலருமாகச் சேர்ந்து துரோவா பட்டணம் வந்தனர். அங்கே ஏழுநாள் தங்கியிருந்தனர்.

பின்னர் வாரத்தின் முதல் நாளில் அப்பம்பிட்டுச் சாப் பிடும்படி சீஷர்கள் கூடி வந் திருந்தார்கள். பவுல் மறுநாளில் புறப்படுவதாக இருந்தார். ஆனால், அவர்களுக்கு பவுலை அனுப்ப விருப்பமில்லை. குறைந்த பட்சம் இன்னும்



ஒருநாள் பவுல் தங்களுடன் தங்கியிருக்கவேண்டும் என ஆசைப்பட்டனர். அவ்வாறு அவர்கள் விருப்பம் கொண்ட தால், அன்று இரவு முழுவதும் பவுல் பிரசங்கித்துவிட்டு, காலையில் பயணிக்கத் தீர்மானித்தார்.

அந்தத் திட்டத்தின்படியே அன்று இரவும் பவுலின் பிரசங் கம் தொடர்ந்தது. அவர்கள் யாவரும் மேல் வீட்டில்தான் கூடியிருந்தார்கள். அவர்கள் கூடியிருந்த மேல்வீட்டில் அநேக விளக்குகள் வைக்கப் பட்டிருந்தன. பவுலின் பிரசங் கத்தைக் கேட்க நிறைய பேர் வந்திருந்தார்கள். வந்திருந்த மக்களை பவுல் ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தார். எவ்விதப் பிரச்சனைகளினாலும் அவர்கள் இயேசுவையோ, இந்த மேலான சத்தியத்தையோ விட்டு நீங்கி விடக்கூடாது என்பதில் பவுல் மிகவும் வைராக்கியமாக இருந்தார்.

பவுல் அவ்வாறு நெடுநேரம் பிரசங்கித்துக் கொண்டே இருந் தார். ஐத்திகுக்குத் தூக்கம் கண் களை அழுத்தத் தொடங்கியது. கொஞ்சநேரத்திலே நன்றாகத்

## மனன வசனம்

**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.**
**சங்கீதம் 91:11.**

தூங்க ஆரம்பித்தான். மூன்றாம் மெத்தையின் ஜன்னலில் இருந்து தான் அவன் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

தேவ ஆவியால் நிறைந்தவராய் அங்கே பவுல் மிகுந்த வல்லமையோடு பிரசங்கித்துக் கொண்டிருந்தார். பவுலின் பிரசங்கம் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

யாவரும் மிகுந்த ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஐத்திகு மெல்லக் கொட்டாவிவிட்டான். தூக்கம் வரத் தொடங்கியது. பவுலின் பேச்சு அவனுக்கு மிகவும் பிரயோஜனமாகத்தான் இருந்தது. ஆனாலும் நீண்டநேரம் பொழுதை அங்கேயே கழித்ததால் தூக்கம் மெல்ல எட்டிப் பார்த்தது.

நன்றாக அவன் தூங்கத் தொடங்கிய போது ஜன்னலில் உட்கார்ந்திருந்த அவன் உடல் தன் கட்டுப்பாட்டை இழந்தது. எனவே, மூன்றாம் மெத்தையிலிருந்து கீழேவிழ நேரிட்டது. அவ்வாறு கீழே விழுந்த ஐத்திகு இறந்து விட்டான்.

அவன் கீழே விழுந்த சத்தம் கேட்டு, விசுவாசிகள் யாவரும் ஓடிவந்தனர். பவுலும் விரைந்து வந்தார். சற்று நேரத்திற்கு முன் உற்சாகமாய் இருந்து இப்போது இறந்த நிலையில் கிடந்த ஐத்திகுவைக் கண்டு அழுது கலங்கினர். பவுல், தனக்குள் ஜெபித்தவாறு அவனருகே வந்தார். அவன்மேல் விழுந்து அவனைத் தன்னுடன் அணைத்துக்கொண்டார். விசுவாசிகளைப் பார்த்து,



## செய்தி

**இக்கட்டான நிலையில் உள்ளோருக்கு உதவும்போது, நான் தேவனைச் சேவிக்கிறேன்.**

"கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது; இவன் சாகவில்லை" என்றார்.

தேவகிருபையால் ஐத்திகு பிழைத்துக் கொண்டான். நடு ராத்திரியிலே தேவன் அந்த அற்புதத்தைச் செய்து அவர்களது அழுகையைக் களிப்பாக மாற்றினார்.

மீண்டும் யாவரும் ஒன்று கூடி உணவருந்தினர். மீண்டும் விடியற்காலமட்டும் பவுல் பேசினார். பின்னர் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

என் மணியே! நாம் விசுவாசத்தோடு ஜெபித்தால் தேவன் நமக்கும் அற்புதம் செய்வார்.

***செய்முறை:*** **இக்கட்டான சமயங்களில் உதவி பெற நாம் என்ன செய்யவேண்டும்? இக்கேள்விக்கான பதிலைக் கண்டறிய இங்கே கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, பதிலை எழுதவும்.**

**பதில் 4**



1. ______________________________




2. ______________________________




3. ______________________________




4. ______________________________